# கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை

கலைப்பீடம்

மூன்றாம் வருடப்பரீட்சை - இரண்டாம் பருவ முடிவு – 2016/2017

## ECN 3262– மனிதவள முகாமைத்துவம்

**நேரம்: 2 மணித்தியாலம்**

நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

---

1. உலகமயமாக்கமானது சந்தையில் நிறுவனங்கள் நிலைப்பிற்கும் வளர்ச்சிக்கும் தங்களிடையே போட்டி தன்மையை எதிர்நோக்குவதற்கு கட்டாயப்படுத்துவதன் மூலம் நிறுவனங்கள் மீது தீவிர தாக்கத்தை ஏற்படுத்தியது. நிறுவனத்தின் உற்பத்தி திறனை மேம்படுத்துவதற்காக நிறுவனத்தின் மேந்தலைச் செலவைக் (Overheads Cost) குறைக்கவும் மற்றும் நிறுவனத்தின் அனைத்து மட்டங்களிலும் செலவுகளை குறைக்கும் பொருட்டுப் பின்பற்ற வேண்டிய மனிதவளத்தோடு தொடர்புடைய நடவடிக்கைகள் எவை? **(25 புள்ளிகள்)**

2. "மனித வள முகாமைத்துவம் ஒரு நிறுவனத்தின் உயர் உற்பத்தி திறன் மற்றும் ஊழியர் உச்ச திருப்தி ஆகியவற்றை அடைவதற்கு பங்களிப்பு செய்கின்றது" உதாரணங்களை பயன்படுத்தி இக்கூற்றினை கலந்துரையாடுக. **(25 புள்ளிகள்)**

3. புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மனிதவள முகாமையாளரான நீர் உமது நிறுவனத்தில் மொத்த ஊழியர் வெளியேற்றத்தை (Turnover) குறைப்பதற்காக ஒரு ஊதியம் (Remuneration) மற்றும் வெகுமதி (Reward) திட்டத்தை உருவாக்க அறிவுறுத்தப்படுகின்றீர். இயற்றிய கொள்கை அறிக்கையில் உள்ளடக்கவேண்டிய முக்கிய அம்சங்களை பற்றிக் கலந்துரையாடுக.

**(25 புள்ளிகள்)**

4.

a. தேர்வு செயன்முறையின் (Selection) மிக முக்கியமான கூறுகளில் ஒன்றாக நேர்காணல் (Interview) ஏன் கருதப்படுகின்றது.? 4000 வலுவான உற்பத்தி தொழிற்சாலைகளை வழிநடத்துவதற்கு இரண்டு தொழிற்சாலை முகாமையாளர்களை சேர்த்து கொள்ளும் பொருட்டு நேர்காணல் முறையினைப் பயன்படுத்துவதன் வரையறைகள் எவை? அவை ஏன் ஏற்படுகின்றன?

**(10 புள்ளிகள்)**

b. மேற்படி நிலைமைகளுக்கான இரண்டு சோதனை முறைகளை (Testing methods) அடையாளம் காணுவதுடன் ஏனைய முறைகளை விட இக்குறிப்பிட்ட முறைகள் ஏன் அனுகூலமானது என்பதைப்பற்றிக் கருதுத்துரைக்க.

**(15 புள்ளிகள்)**

5. “பயிற்சி மற்றும் மேம்படுத்தல் ஒரு ஊழியரின் வினைத்திறன் மற்றும் உற்பத்தி திறன் என்பவற்றை அதிகரிக்க உதவும் அதேவேளை அந் நிறுவனத்தின் செலவினையும் குறைக்கின்றது.” பயிற்சி மற்றும் மேம்படுத்தல் முறைகளை விபரித்து மேற்கூறிய கூற்றின் பொருத்தப்பாட்டினைக் கூறுக.

**(25 புள்ளிகள்)**

6. “ஊழியர் செயலாற்றத்தை (Performance) மதிப்பிடுவதற்கு ஒரு முக்கிய வழிமுறையாக நிறுவனங்கள் செயலாற்றல் பகுப்பாய்வினை (Performance appraisal) மேற்கொள்கின்றன.” ஊழியரை மதிப்பிடுவதற்கான குறைந்தது மூன்று முறைகளை குறிப்பிட்டு நிறுவனத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக ஊழியர்களை ஊக்குவிப்பதற்கு அம் முறைகள் எவ்வாறு உதவுகின்றன என்பதையும் சுருக்கமாகக் கலந்துரையாடுக.

**(25 புள்ளிகள்)**

7. உயர் உற்பத்தி திறன் மற்றும் திருப்திகரமான பணியாளர்களை பேணுவதற்கு வெகுமதிகள் (Rewards) மற்றும் அங்கீகாரம் (Recognition) என்பன மிக முக்கியமான கூறுகளாகும். இவற்றினை அடைவதற்கு தொழில் வடிவமைப்பு (Job design) எவ்வாறு உதவி புரிகின்றது என்பதையும் ஒரு சைக்கிள் தயாரிப்பு நிறுவனத்தின் வடிவமைப்பாளர்களுக்கு எவ்வகையான தொழில் வடிவமைப்பு முறையினை பரிந்துரை செய்வீர் என்பதையும் கருத்துரைக்க.

**(25 புள்ளிகள்)**

*********